வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 05   29.10.2024 செவ்வாய்க்கிழமை   இதழ் : 302   பக்கங்கள் : 12

# இலங்கைக்கு பயண தடை எதுவும் விதிக்கவேயில்லை!

## அமெரிக்க தூதுவர் கூறுகிறார்



கொழும்பு, ஒக்ரோபர் 29

இலங்கைக்கான பயணத் தடை எதையும் அமெரிக்கா விதிக்க வில்லை. அறுகம் குடாவுக்கு செல்லும் அமெரிக்க பிரஜைகளை அவதானத்துடன் செயல்படுமாறு மாத்திரமே அறுவுறுத்தல் வழங் கப்பட்டது - என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெளிவுபடுத்தியுள்ளார்.

11

## பனை அபிவிருத்தி சபைக்கு ஒரு வாரத்தில் புதிய தலைவர்!

யாழ்ப்பாணம், ஒக். 29

பனை அபிவிருத்தி சபையின் புதிய பணிப்பாளராக விநாயகமூர்த்தி சகாதேவன் நேற்று திங்கட்கிழமை பொறுப்பேற்றுள்ளார் என்று அதன் பொது முகாமை யாளர் எஸ். சிறீவிஜயேந்திரன் தெரிவித்துள்ளார்.

இரேனியஸ் செல்வின் கடந்த 22ஆம் திகதி பனை அபிவிருத்தி சபை யின் தலைவராக நியமிக்கப்பட்டி ருந்தார். இந்த நிலையில், இவர் பதவியேற்ற அதே தினத்திலிருந்து நடை முறைக்கு வரும் வகையில் சகாதேவன் புதிய பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

11

## யாழிலிருந்து இன்று கொழும்புக்கு ரயில்!

### கடவைகளை பயன்படுத்தும் மக்கள் அவதானமாக செயல்பட அறிவுறுத்து!

யாழ்ப்பாணம், ஒக். 29

நேற்றைய தினம் கொழும்பிலிருந்து யாழ்தேவி ரயில் யாழ்ப்பாணம் வந்தது. இந்த ரயில், இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து கொழும்புக்கு சேவையை நடத்தவுள் ளது.

இதனிடையே, ரயில் கடவைகளை பயன்படுத் தும் போதும் ரயில் பாதைகளை கடக்கும்

11

## இராணுவத்தைக் காட்டி கொடுத்தவருக்கு உயர்பதவி

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 29

சனல்-4 தொலைக்காட்சியின் ஊடாக இராணு வத்தை காட்டிக்கொடுத்த தேசத் துரோகிக்கு தற்போ தைய அரசாங்கத்தில் உயர்பதவி வழங்கப்பட்டுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன் பில குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பின்போது உயிர்த்த ஞாயிறுதின

11

## ஆபிரிக்க பன்றி காய்ச்சல் வடக்கிலும் பதிவாகியுள்ளது

கொழும்பு, ஒக். 29

மேல் மாகாணத்தில் பதிவான ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் வடக்கு மாகாணத்திலும் பதிவாகியுள்ளதாக மேல்மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகா தார திணைக்கள பணிப்பாளர் கே.கே.சரத்

11

## கல்வி கற்பிக்கும் நேரத்திலும் ஆசிரியர்கள் கைபேசி பாவனை

### கண்டித்து பெற்றோர்கள் போராட்டம்

- பா. பிரசன்னா -



யாழ்ப்பாணம், ஒக். 29

பாடசாலை நேரத்தில் ஆசிரியர்கள் அதிக நேரத்தை கைபேசியில் செலவிடுகின்றனர், தரம் 5 வரையான மாணவர்களுக்கு 3 ஆசிரியர்கள் மட்டுமே சேவையில் உள்ளனர். அவர்களும் பாரபட்சமான முறையில் கல்வி வழங்குகின்றனர் - என்று தெரிவித்தும், ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய

11

## யானை தாக்கி முல்லைத்தீவில் இளைஞர் பலி!

முல்லைத்தீவு, ஒக். 29

காட்டு யானை தாக்கி யதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். முல்லைத் தீவு - முத்துஐயன்கட்டு - முத்துவிநாயகபுரம் பகு தியை சேர்ந்த 23 வய தான இளைஞரே இவ் வாறு உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கிரா மத்துக்குள் நுழைந்த யானை இளைஞரை தாக்கி கொன்ற தாகக் கூறப்

11

## ஜே.வி.பியினர் நல்லவர்கள்

### கஜதீபன் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஒக். 29

ஜே. வி. பியினர் மிக வும் நல்லவர்கள். ஏனென் றால், உண்மையான விட யங்களை அவர்கள் பகி ரங்கமாக சொல்கின்றார் கள் - இவ்வாறு ஜன நாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பாராளு மன்ற வேட்பாளர் பா. கஜதீபன் தெரிவித்துள் ளார்.

நேற்று மூளாய் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடந்த

11









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

தமிழகத்தில் தேர்தல் நடைபெறுகின்ற காலங்களில் எல்லாம் நடிகர் ரஜினி காந்த் யாருக்கு ஆதரவு என்பதில் போட்டி நடக்கும். அவர் யாரை ஆதரிக்கிறார் என்பதை அறிந்தால், அவரின் இலட்சக்கணக்கான இரசிகர்களும் அவர் போலவே தம்மை ஆதரிப்பார்கள் என்று கட்சிகள் கருதுவதுண்டு.

ஒரு தேர்தலில் அவர் யாருக்கு வாக்களித்தார் என்பதை இரகசியமாக கமெராவில் பதிவுசெய்து அது உடனே ஊடகங்களில் வெளியாகி பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியது. அந்தத் தேர்தலில் அவர் இரட்டை இலைக்கு (ஜெயலலிதாவின் அண்ணா தி. மு. க.) வாக்களித்ததாக தெரியவர, அந்தத் தேர்தலில் ஜெயலலிதா அமோக ஆதரவுடன் வெற்றிபெற்றது இதற்கு காரணமாக இருக்கலாம்.

இலங்கையில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸநாயக்க, வெற்றிபெற்றதும் அதாவது, இதற்கு முந்திய தேர்தல்களில் எல்லாம் மூன்று வீத வாக்குகளுடன் இருந்த அவரின் கட்சி, ஒரே பாய்ச்சலில் நாற்பத்தி இரண்டு வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதும் அவரது 'இமேஜ்' நாடு முழுவதும் மக்களை – குறிப்பாக இளைஞர்களை ஆகர்சிக்கப் பண்ணியிருக்கின்றது.

சிங்கள தேசிய உடையில் அல்லது ஆங்கில தேசிய உடையில் மாத்திரமே நாட்டின் தலைவரை இதுகாலவரை பார்த்து வந்த மக்களுக்கு ஒரு சாதாரணன் அந்த உச்ச பதவியில் அமர்ந்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியதும் அவர்மீது இளையவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்குக் காரணமானது. அதனால்தான், அவர் பற்றியே இப்போது தேர்தல் மேடைகளில் பேசப்படுகின்றது. தொண்ணூறுகளில் இதேபோலத்தான், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதும் மக்களுக்கு ஓர் ஈர்ப்பு இருந்தது. அதனால்தான் சந்திரிகா சாறி, சந்திரிகா சட்டை என்று ஒவ்வொன்றிலும் சந்திரிகா பேசப்பட்டார்.

இன்று அநுரமீதான இந்த அலை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பது இன்று சொல்லக்கூடியதல்ல, ஆனாலும் இந்தத் தேர்தலில் அது தீவிரமாக வேலை செய்கின்றது.

அதனால்தானோ என்னவோ நமது தலைவர்கள் சிலரும் அநுரவுடன் தமக்கு நெருக்கம் என்பதுபோலவும் அவர் ஆட்சியில் தாங்களும் முக்கிய பதவிகளில் இருப்போம் என்பதுபோலவும் 'கதைவிடத்' தொடங்கியிருக்கின்றனர்.

தோழர் அநுரகுமார ஜனாதிபதியாக பதவியேற்றதும் வடக்குக்கு ஒரு முக்கிய பதவிக்கு நியமிக்கப்பட்டவர். ஏற்கனவே, தமிழ் அரசின் மேடைகளில் காணப்பட்ட ஒருவர். அவர் இந்தத் தேர்தலில் போட்டியிடுவார் என்றும் பேசப்பட்டது. ஆனால், அவர் அந்த முக்கிய பதவிக்கு நியமிக்கப்பட்டதும் அவரை அந்தப் பதவிக்கு 'இவரே' சிபார்சு செய்திருக்கிறார் என்று அவரே அரசல்புரசலாக செய்தியை கசியவிட்டார். ஆனால், அது ஜே. வி. பியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரின் தெரிவு என்று பின்னர் தெரியவந்தது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் விஞ்ஞாபனத்தில் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தயாரிக்கப்பட்டு நின்றுபோன புதிய அரசமைப்பு முயற்சியை தமது அரசு தொடரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதாவது, தமிழ் மக்களுக்கு பரிச்சயமான பாஷையில் சொல்வதெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மறைந்த சம்பந்தன் ஐயா ஒவ்வொரு தீபாவளியிலும் அடுத்த தீபாவளிக்கு வந்துவிடும் என்று சொல்லிக்கொண்டிருந்த 'எக்க ராஜ்ய' அரசமைப்பை நிறைவுசெய்வதையே முன்னெடுக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனால்தான், அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த தமிழ் அரசின் பேச்சாளர் சுமந்திரன், அதுகுறித்து ஜனாதிபதியை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார்.

அதாவது, புதிய அரசாங்கம் அந்த அரசியலமைப்பு வரைவை முழுமைப்படுத்தி – அமுல்படுத்த விரும்புகின்றது என்றும் அதற்கு தமிழ் அரசு தனது ஒத்துழைப்பை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தது எதனால் என்பது நமக்கு புரியாததல்ல.

அதாவது அப்படி புதிய அரசாங்கம், தானும் ஜயம்பதியும் இணைந்து தயாரித்த புதிய அரசமைப்பு முயற்சியை நிறைவு செய்யவிருக்கின்றது என்றால், தானும் இந்த வேளையில் பாராளுமன்றத்தில் இருக்கவேண்டியது அவசியம் என்ற செய்தியை அவர் மறைமுகமாக சொன்னார் என்பதைப் புரிந்துகொள்ள அதிகம் ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லை.

ஆனால், அரசமைப்பு முயற்சியை முழுமைப்படுத்த பாராளுமன்றத்துக்குள் இருக்கின்றவர்கள் மாத்திரம் பணியாற்றப்போவதில்லை. அடுத்த பாராளுமன்றம் அதனை நிறைவேற்ற வேண்டுமே தவிர, அதனை பாராளுமன்றத்தில் இருப்பவர்கள்தான் முழுமைப்படுத்த வேண்டும் என்பதல்ல.

இந்தச் செய்தி வெளியானதும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஒரு கோரிக்கையை விடுத்தார். "ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வை பெற்றுத் தருவோம். அதற்கான ஆணையைத் தமிழ் மக்கள் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் வழங்க வேண்டும்" என்பதே அந்தக் கோரிக்கை. ஆனால், அதனையே "தங்களையும் தமிழ் அரசு கட்சியில் உள்ள ஆளுமைமிக்கவர்களையும் தெரிவு செய்யவேண்டும்", என்று அவர் கோரினாரென செய்திகள் வெளியாகின. ஆனால், அதுகுறித்து ஒரு தொலைக் காட்சிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர்,

"தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஆளுமையுள்ளவர்கள் வடக்கு, கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு வர வேண்டும். வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்களும் நிச்சயமாக பாராளுமன்றம் செல்வோம். நாங்கள் அனைவரும் கரம் கோத்துக்கொண்டு சிநேகபூர்வமான முறையில் அநுர அரசுடன் பேச்சு நடத்தி நாட்டில் தீராத இனப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவோம்." என்று கூறியுள்ளார்.

ஆளுமை என்று அவர் எதனைக் குறிப்பிடுகின்றார் என்பது தெரியவில்லை. ஆனால், ஆளுமை மாத்திரமல்ல. எமது கொள்கைகளில் உறுதியாக இருக்கக்கூடியவர்களையே மக்கள் பாராளுமன்றம் அனுப்பவேண்டும். தமக்கு வேண்டியவர்கள் ஆட்சியில் இருந்தால் – அவர்களுக்கு முண்டு கொடுப்பதும், அவர்களுக்கு தெற்கில் நெருக்கடி வராமல் நமது தீர்வை கேட்கவேண்டும் என்று நினைப்பதும் தமிழ்த் தேசிய ஆளுமை அல்ல.

– ஊர்க்குருவி.

# இரு மொழி புத்தக வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 29

"வடக்கு மாகாண நீர் வளங்களும் அவற்றின் பயன்பாட்டு உத்திகளும் பங்கீட்டுக் கொள்கையும் - Northern Province Water Resources and their Utilization Policy and Strategies" இரு மொழி புத்தக வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை பிற்பகல் 4. 30 மணிக்கு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்துகொள்வார்.

புனர்வாழ்வு அமைச்சின் முன்னாள் செயலாளர் எந்திரி வே. இரகுநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சு. ராஜதுரை, வவுனியா பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் யோ. நந்தகோபன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர் க. பத்மநாதன் ஆகியோர் நூல் ஆய்வுரைகளை வழங்குவர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் ம. ஜெகூ, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக (கிளிநொச்சி) பொறியியல் பீட பேராசிரியர் தி. திருவரன், பொறியியல் சேவைகள் பதில் பிரதிப் பிரதம செயலாளர், எந்திரி ந. சுதாகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக (கிளிநொச்சி) பொறியியல் பீடத்தைச் சேர்ந்த கலாநிதி பா. கேதீசன், கலாநிதி ப. கதிர்காமநாதன், வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் எந்திரி த. ராஜகோபு ஆகியோர் கலந்து கொள்வர். (எ)

# கரவை அபிவிருத்தி ஒன்றிய தலைவர் காலமானார்!



வடமராட்சி, ஒக். 29

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி எஸ். பொன்னம் பலம் (வயது 84) காலமானார். அண்மை நாட்களாக சுகயீனம் அடைந்திருந்த அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலமானார்.

கொழும்பில் உபாலி குழுமத்தில் பல உயர் பதவிகளை வகித்த அவர் சொந்த ஊரில் உபாலி பொன்னம்பலம் என்றே அழைக்கப்பட்டு வந்தார். பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் கரவெட் டியில் சமூக சேவைகளை முன்னெடுப்பதற்காக கர வெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தை ஆரம்பித்து அவர் முன்னெடுத்த பல அபிவிருத்தி திட்டங்கள் அந்த கிராமத்தின் நிலக் காட்சியையே மாற்றிமைத்ததாக பலரும் வியந்து கூறுவர்.

உபாலி பொன்னம்பலம் கரவை விக்னேஸ்வரா கல் லூரியின் பழைய மாண வர்கள் சங்க கொழும்பு கிளையின் ஸ்தாபகர்களில் ஒருவர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

அவரின் இறுதிச் சடங்கு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கரவெட்டியில் நடைபெறும். (ஐ)

# 10 லீற்றர் கசிப்புடன் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 29

ஆனைக்கோட்டையில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தில் ஈடுபட்டவர் 10 லீற்றர் கசிப்புடன் நேற்று திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.10.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**

**தொலைபேசி : 021 205 2300**

## அநுரவுக்கு அவகாசம் தேவை

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் அவர் உட்பட மூவரை அமைச்சர்களாகக் கொண்டு தற்போது பதவியில் இருப்பது ஓர் இடைக்கால அல்லது காபந்து அரசாங்கமே. இரு தசாப்தங்களுக்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்துவந்த போதிலும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் 2004 அரசாங்கத்தில் ஓர் அமைச்சராகப் பதவி வகித்தமையைத் தவிர ஆட்சி அனுபவம் எதுவும் இல்லாதவர் ஜனாதிபதி திஸநாயக்க.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்று வெறுமனே ஒரு மாத காலம் மாத்திரமே கடந்த நிலையில் திஸநாயக்கவின் அரசாங்கத்தின் செயல்பாடுகளில் பிழை கண்டுபிடிப்பதில் எதிரணிக் கட்சிகள் குறிப்பாக அவரிடம் தோல்வி கண்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். திஸநாயக்கவைப் போன்று பதவிக்கு வந்த ஒரு மாத காலத்துக்குள் பெருமளவுக்கு எதிர்மறையான விமர்சனங்களுக்கு உள்ளான அனுபவம் வேறு எந்த முன்னாள் ஜனாதிபதிக்கும் இருந்ததில்லை.

பொருட்களுக்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்து நிற்கும் யுகம் மீண்டும் விரைவில் தோன்றப் போகிறது. பொருளாதார நெருக்கடியை கையாள்வதில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் பாரதூரமான சவாலை எதிர்நோக்கப் போகிறது. மூன்று மாதங்களாவது திஸநாயக்கவின் அரசாங்கம் தாக்குப்பிடிக்கும் என்பது சந்தேகமே. இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்துவதற்கு தீட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் திட்டங்கள் காரணமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையில் ஏற்படப்போகும் வீழ்ச்சி - வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியத்தை கடுமையாகப் பாதிக்கப்போகிறது என்றெல்லாம் பலவாறாக பூச்சாண்டி காட்டும் வேலைகளில் எதிரணிக் கட்சிகள் இறங்கியிருக்கின்றன.

இன்னமும் பதினேழு நாட்களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தன்னால் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் ஊழலும் முறைகேடுகளும் இல்லாத நிர்வாகத்தை நடத்துவதற்கும் பலம்பொருந்திய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத் தேர்தலில் அமோக ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதி திஸநாயக்க வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுத்து வருகிறார். ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் மக்களிடம் எதைக் கூறி வாக்குக் கேட்பது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் எதிரணித் தலைவர்களும் அவர்களைச் சார்ந்த அரசியல்வாதிகளும் திஸநாயக்கவின் அரசாங்கத்தின்மீது பிழைகண்டு பிடிப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

தென்னிலங்கை நிலவரம் இவ்வாறு இருக்கையில், வடக்கு - கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகளும் ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் படுமோசமான இனவாத சக்திகளாக தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால், அந்தக் கட்சிகளின் பல தலைவர்கள் திஸநாயக்கவைச் சந்தித்து படங்களை எடுத்து அவற்றை ஊடகங்களில் வெளியிடுவதில் எந்த அசௌகரியத்தையும் அடையவில்லை. தமிழ்க் கட்சிகளையும்விட தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு, கிழக்கில் கூடுதல் ஆசனங்கள் கிடைத்துவிடுமோ என்று தமிழ் அரசியல்வாதிகள் பயப்படுகிறார்கள். தங்களது இதுகாலவரையான அரசியலில் தமிழ் மக்கள் கடுமையான வெறுப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் நன்றாகவே விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய ஜனாதிபதி தனது நிலையை வலுப்படுத்தி அதிகாரத்தில் ஒழுங்காக அமருவதற்கு முன்னதாகவே அவருக்கு எதிராகத் தீவிரப்படுத்தப்படும் பிரசாரங்கள் சாமானியன் ஒருவன் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருப்பதை பழைய அரசியல் அதிகார வர்க்கத்தால் ஜீரணிக்க முடியவில்லை என்பதை பிரகாசமாக வெளிக்காட்டுகிறது.

ஆட்சிமுறை அனுபவம் இல்லாதவர்கள் என்று திஸநாயக்கவையும் தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகளையும் இன்று காணும் விக்கிரமசிங்கவும் ஏனையவர்களும் பிரதேச சபை உறுப்பினராகக்கூட இருக்காத கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தபோது ஆட்சிமுறை அனுபவத்தைப் பற்றி எதையும் பேசவில்லையே. அதுதான் வர்க்க நலன்களின் சங்கமம் எனப்படுவது.

பாராளுமன்றத் தேர்தலுக்கு பிறகு தேசிய மக்கள் சக்தி உறுதியான ஓர் அரசாங்கத்தை அமைக்க அனுமதித்து திஸநாயக்கவின் தலைமையில் அது நாட்டை நிர்வகிக்க ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்குவதே உண்மையில் ஜனநாயக பண்பும் அரசியல் நாகரிகமுமாகும்.

# வடக்கு, கிழக்கில் மக்கள் தெரிவுசெய்யும் மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைக்கவேண்டும்



ஸ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

*வடக்கு, கிழக்கில் மக்கள் தெரிவுசெய்யும் மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைக்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.*

*இது தொடர்பாக சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையின் விபரம் வருமாறு*

*அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது உட்பட பல்வேறு நடவடிக்கைகளின் ஊடாக தேசிய நல்லிணக்க செயல்முறையை முன்னெடுக்கப் போவதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் தேர்தல் பிரசாரங்களிலும் வாக்குறுதியளித்தார்.*

*ஆட்சிமுறையில் மக்கள் இணைந்துகொள்வதற்கு வாய்ப்பொன்றை வழங்குவதற்காக “மாகாண சபைகள் தேர்தலை ஒரு வருட காலத்துக்குள் தனது அரசாங்கம் நடத்தும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டது.*

*இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்காக இந்திய அரசாங்கத்துடன் இணங்கிக் கொள்ளப்பட்ட சமாதான செயன்முறையின் ஓர் அங்கமாகவே மாகாண சபைகள் நிறுவப்பட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையினராக வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் அந்தப் பகுதிகளில் பிரதிநிதிகளை தெரிவு செய்து தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பதற்கு மாகாண சபைகள் அனுமதிக்கின்றன என்பதே அந்த முறைமையின் முக்கியத்துவமாகும்.*

*இந்தியா, சுவிற்சர்லாந்து உட்பட பெரும்பாலான வெற்றிகரமான நாடுகளில் இதே போன்ற அதிகாரப் பரவலாக்கல் முறைமைகள் நடைமுறையில் இருக்கின்றன. சுதந்திரமடைந்த நேரத்தில் இலங்கை சுவிற்சர்லாந்துடன் ஒப்பிடப்பட்டது.*

*வெளியேறிய பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட மத்தியமயப்பட்ட அரசாங்க முறைமை பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் சிறுபான்மை இனத்தவர்களுக்கும் இடையில் பயனுறுதியுடைய அதிகாரப் பகிர்வை தடுத்தது என்று தேசிய சமாதானப் பேரவை நம்புகிறது.*

*மத்தியமயப்பட்ட ஆட்சிமுறை தலைநகர் பிராந்தியத்துக்கும் மாகாணங்களுக்கும் இடையில் பெரும் பொருளாதார ஏற்றத் தாழ்வையும் தோற்றுவித்தது. அதன் விளைவாக சனத்தொகையில் பெரிய பிரிவினர் பொருளாதார ரீதியில் ஓரங்கட்டப்பட்டதுடன் அரசியல் ரீதியாகவும் வலுவிழந்தனர். அதிகாரப் பரவலாக்கத்தை உள்ளடக்குகின்ற "முறைமை மாற்றத்தை" நாம் முன்னெடுக்க வேண்டியது அவசியமாகிறது.*

*மாகாண சபைகள் அவற்றின் செயல்பாடுகளைப் பொறுத்தவரை பெருமளவுக்கு பயனுறுதியுடையவையாக இருக்கவேண்டும் என்று மாகாண ஆளுநர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி திஸநாயக்க அண்மையில் கூறிய ஆலோசனை மெச்சத்தக்கது. ஆனால், ஜனாதிபதியின் பிரதிநிதிகளால் அன்றி மக்களின் பிரதிநிதிகளால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற மாகாண சபைகள் தொடர்பிலான விவகாரங்களை அவர் ஆளுநர்களுடன் கலந்தாலோசிக்கவில்லை. ஆளுநர்கள் ஜனாதிபதியால் நேரடியாக அரசியல் ரீதியாக நியமனம் செய்யப்படுபவர்களே.*

*மாகாண சபைகள் பெரும் செலவை ஏற்படுத்துகின்றதும் நாட்டுக்கு ஒரு சுமையாக அமைகின்றதுமான தேவையற்ற ஓர் ஆட்சிமுறை அடுக்கு என்ற வாதங்கள் மாகாண சபைகளின் நோக்கங்களுக்கு பொருத்தமற்றவை. மாகாண சபைகளின் நோக்கத்தையும் இனப்பிரச்னையை கையாளுவதில் அதன் வகிபாகத்தையும் சில அரசாங்க அதிகாரிகள் உணர்ந்து கொள்ளவில்லை. அவர்களின் அண்மைய கருத்துகள் இதை வெளிக்காட்டுகின்றன என்பதை தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்ட விரும்புகிறது.*

*தேர்தல் வெற்றிக்காக ஜனாதிபதி திஸநாயக்கவை தேசிய சமாதானப் பேரவை பாராட்டி வாழ்த்துகிறது. தேர்தல் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் வளமானதும் துடிப்பானதுமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர் முன்னெடுக்கும் சரியான சிந்தனையுடனான முயற்சிகளை தேசிய சமாதானப் பேரவை உறுதியாக ஆதரிக்கும். தனது வாக்குறுதிகள் நாட்டின் சகல பாகங்களிலும் வாழும் சகல சமூகங்களையும் சேர்ந்த மக்களுக்கு யதார்த்தமாகக்கூடியதாக தேசிய நல்லிணக்க செயன்முறை மீதான பற்றுறுதியை ஜனாதிபதி தெளிவாக வெளிக்காட்ட வேண்டும் என்று நாம் அழைப்பு விடுக்கிறோம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 29 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 12
நல்ல நேரம் : 7.31 - 09.30
ராகு காலம் : 3.00 - 4.00
திதி : திரயோதசி




**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வரவு உயரும் நாள்.

**இடபம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக்கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். புதுவேலை கிடைக்கும். வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் வந்து போகும். லாபம் ஈட்டுவீர்கள்.

**கடகம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். மனதிற்கு இதமான செய்தி வரும். லாபம் உண்டு.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். பழைய பிரச் னைகளுக்கு மாறுபட்ட அணுகு முறையால் தீர்வு காண்பீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக்கொள்ளாதீர்கள். பண விஷயத்தில் சாக்கு போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். அரசு காரியங்கள் இழுபறியாகும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும்.

**தனுசு**
கடந்த கால சுகமான அனுபவங்கள் மனதில் நிழலாடும். உறவினர், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். லாபம் அதிகரிக்கும்.

**மகரம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப்பேச்சிற்கும் ஆளாவீர்கள். அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம். நல்லது.

**மீனம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். விலை உயர்ந்த மின்னணு மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். வியாபாரம் சூடு பிடிக்கும்.

# யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட வெள்ளிவிழா






யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வெள்ளி விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பீடாபதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குண ராஜா பிரதம விருந் தினராகக் கலந்து கொண்டார். நிகழ்வில் முன்னாள் துணை வேந்தர்கள், பீடாதிபதிகள், பேரவை உறுப்பினர்கள், விரிவு ரையாளர்கள், பழைய மாண வர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். வெள்ளி விழா மலர் வெளியீடும், 25 வருடங்களுக்கு மேல் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றன. (எ)

# பங்குத்தந்தை விடுதி அமைப்பதற்கு கொடிகாமத்தில் அடிக்கல் நாட்டல்



யாழ்ப்பாணம், ஒக். 29

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தனின் விசேட நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது.

கொடிகாமம் புனித இராயப்பர் தேவாலயத்தின் பங்குத் தந்தை விடுதி அமைப்பதற்கு ஒரு மில்லியன் ரூபாய் நிதி, சித்தார்த்தனால் ஒதுக்கப்பட்டிருந்தது.

குறித்த வேலை திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆலய பங்கு தந்தை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் ஞா. கிஷோர், சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் செ. மயூரன் மற்றும் தேவாலயத்தின் நிர்வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக அடிக்கல்லை நாட்டி வைத்த னர்.

கொடிகாமம் புனித இராயப்பர் தேவாலயத்தில் பங்குத் தந்தை விடுதி இதுவரை காலமும் இல்லாத நிலையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் விசேட நிதி ஒதுக்கீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ளது. (எ)

# வெளிநாட்டு நீதிமன்றங்களால் எங்களுக்கு நீதி வழங்க முடியாது

## யாழில் கூறினார் பிமல் ரத்நாயக்க

யாழ்ப்பாணம், ஒக். 29

"வெளிநாட்டுத் தலையீட்டின் கீழ் எங்கள் நாட்டுப் பிரச்னையைத் தீர்க்க முடியாது.

வெளிநாட்டு நீதிமன்றங்கள் எங்களுக்கு ஒருபோதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம்.

சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்து விட்டு இன்று உலக நாடுகள் செயல்படுகின்றன"-

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தேசிய மக்கள் சக்தியினர் சர்வதேச விசாரணைக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

எங்கள் மேல் விமர்சனங்களை முன்வைப்பவர்களிடம் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். அமைச்சரவைத் தீர்மானங்களை முழுமையாக வாசித்து விட்டு எங்கள் மீது விமர்சனங்களை முன்வையுங்கள்.

எங்களுக்கு எதிராக தமிழ் மக்களிடம் கூறுவதற்கு எந்தவொரு விடயமும் கிடையாது. இதனால் சர்வதேச விசாரணை என்ற விடயத்தை இவர்கள் கையில் எடுத்திருக்கின்றார்கள். தமிழ் மக்களை இனவாத ரீதியாகச் சூடாக்கி அதில் குளிர்காய்கின்ற வேலையைத் தமிழ்க் கட்சிகள் செய்துவருகின்றன.

எங்கள் மீது இனவாத சாயத்தைப் பூசுகின்ற நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கியுள்ளனர்.

சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்துவிட்டு இன்று உலக நாடுகள் செயல்படுகின்றன.

உதாரணமாக பலஸ்தீன பிரச்னையைக் குறிப்பிடலாம். அங்கு இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப் படுகின்றனர். இதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றங்கள் தீர்ப்புகளை வழங்கியுள்ள போதும் அதனை நடைமுறைப் படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில், சர்வதேச நீதிமன்றத்திடம் சென்று நீதியைப் பெறுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதற்கு ஒப்பானது.

புலம்பெயர் தமிழர்களிடமும் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். ஒரு சில அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தாங்கள் புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்து வப்படுத்தியவர்கள் எனக் கூறி அரசியல் சித்து விளையாட்டுக்களை மேற்கொள்கின்றார்கள்.

குறித்த கட்சிகளுக்கு எவ்வாறு நிதி சேகரிப்பு நடைபெறுகின்றன என்பது சந்தேகத்துக்கிடமானதாகும். வெளிநாடுகளில் இருந்து பணத்தைக் கொண்டு வந்து 70 வருடங்களுக்கு மேலான போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்ற கீழ்த்தரமான அரசியலை சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் செய்கின்றன. இவை அருவருக்கத்தக்க செயல்பாடுகளாகும். எனவே, புலம்பெயர் தமிழர்களிடம் ஒன்றைக் கேட்டுக் கொள்கின்றோம். எங்களுடைய பெயரைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம்" - என்றார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்காத 14 முன்னாள் அமைச்சர்கள்!

கொழும்பு, ஒக். 29

**14 முன்னாள் அமைச்சர்கள் தமக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை இதுவரை வழங்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதில் நல்லாட்சி அரசாங்கத்தின்போது முன்னாள் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஆர். சம்பந்தன் மற்றும் பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ ஆகியோரின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

அத்துடன், வாகன விபத்தில் உயிரிழந்த முன்னாள் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயன்படுத்திய உத்தியோகபூர்வ இல்லம் இதுவரை கையளிக்கப்படவில்லை.

முன்னாள் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, முன்னாள் மாகாண சபை மற்றும் உளளூராட்சிமன்ற அமைச்சர் ஜனக வக்கம்புர, முன்னாள் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே, கால்நடை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி. பி. ஹேரத், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார்,

முன்னாள் விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன் டி சில்வா, முன்னாள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, பெருந்தோட்டக் கைத்தொழில் முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரன, முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம,

முன்னாள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, முன்னாள் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மற்றும் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோரின் பெயர்களும் இந்தப் பட்டியில் உள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்குமாறு அரசாங்கம் அறிவித்திருந்தது.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட முன்னாள் அமைச்சர்கள் இதுவரை தமது உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# டட்லி சிறிசேனவின் அரிசி ஆலையில் திடீர் சோதனை

கொழும்பு, ஒக். 29

பொலனறுவையில் பிரபல வர்த்தகர் டட்லி சிறிசேனவின், அரிசி ஆலையில் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

பொலனறுவையில் உள்ள அவரது சுது அரலிய அரிசி ஆலையை அதிகாரிகள் சோதனையிட்டுள்ளனர்.

மாவட்டத்தின் நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளே இந்த சோதனையில் ஈடுபட்டனர்.

நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்காகவே இந்த சோதனையை மேற்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பன்றிகளுக்கு பரவிய நோய் இப்போது கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, ஒக். 29

இலங்கையில் அண்மையில் பன்றிகளுக்குப் பரவிய நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மையில் பன்றிகளுக்குப் பரவிய நோயானது ஆபிரிக்காவில் பரவிய நோய் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலும் கம்பஹா மாவட்டத்திலும் முதன்முறையாகக் குறித்த நோயானது அடையாளம் காணப்பட்டது. (அ)

# மூன்று வாரத்துக்குள் அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, ஒக். 29

நாட்டில் கடந்த மூன்று வாரத்துக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் கடந்த 20 நாட்களில் மாத்திரம் 85 ஆயிரத்து 836 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலானவர்கள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மதுபோதையுடன் ஓட்டோ பந்தயம்!

**9 சாரதிகள் கைது!!**

கொழும்பு, ஒக். 29

கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதியில் போக்குவரத்து விதிகளை மீறி பந்தையத்தில் ஈடுபட்ட ஓட்டோச் சாரதிகளை வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வத்தளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் அதிகாலை இந்த குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

9 ஓட்டோக்களுடன் 09 சாரதிகளே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய, தெமட்டகொடை, மோதரை, கெரவலப்பிட்டிய மற்றும் மாபோல பகுதிகளைச் சேர்ந்த 18-22 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதியின் மாபொல பகுதியில் நீண்ட காலமாக குறித்த குழுவினர் இந்த பந்தயத்தை மேற்கொண்டு வந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், அவ்வீதியில் பயணிக்கும் வாகனங்கள், பாதசாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஓட்டோச் சாரதிகள் ராகம பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர் படுத்தப்பட்டபோது அவர்கள் மது அருந்தியிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை வெலிசறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பரீட்சைகள் திணைக்களத்தின் 23 குரல் பதிவு கருவிகள் மாயம்!

கொழும்பு, ஒக். 29

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு சொந்தமான 23 குரல் பதிவு கருவிகள் காணாமல் போயுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களம் தொடர்பாக கணக்காய்வு அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம், பாடசாலை பரீட்சை அமைப்புக் கிளைக்கு வழங்கப்பட்ட 07 குரல் பதிவு கருவிகளை காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மதிப்பீட்டு நோக்கங்களுக்காக ஒப்படைக்கப்பட்ட 16 குரல் குரல் பதிவு கருவிகளும் மாயமாகியுள்ளன.

இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக, பரீட்சை திணைக்கள கணக்கு அலுவலர், தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கு அறிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் நிதி விதிகளின்படி இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பரீட்சை திணைக்களத்துக்கு தேசிய கணக்காய்வு அலுவலகம் பரிந்துரை செய்துள்ளது.

# வெடிபொருட்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது!

கொழும்பு, ஒக். 29

அநுராதபுரம் மாவட்டத்தில் வெடிபொருட்கள் வைத்திருந்த குற்றச் சாட்டில் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த நபர்களிடம் இருந்த வெடிபொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து சிலருக்கு திடீர் கரிசனை!

**கர்தினால் மல்கம் ரஞ்சித்**



கொழும்பு, ஒக். 29

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சிலருக்கு இப்போதுதான் திடீர் கரிசனை ஏற்பட்டுள்ளதாக, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பில் தற்பொழுது திடீரென கரிசனை ஏற்பட்டு, பேசும் அரசியல்வாதிகளில் எவ்வித பயனுமில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பில் ஒரு வார்த்தைகூட பேசாத அரசியல் தலைவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தற்பொழுது இத்தாக்குதல் குறித்து விசேட கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடைபெறவுள்ளதால், தங்களை வீரர்களாக காண்பித்துக்கொள்ள அவர்கள் முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இவ்வாறான நபர்களினால் எவ்வித பயனும் கிடையாது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

## அறுகம்குடாவுக்கு எச்சரிக்கை;

# சுற்றுலா பயணிகளின் வருகை பாதிப்பில்லை

கொழும்பு, ஒக். 29

அறுகம்குடா சுற்றுலா வலயத்திற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வழமைக்கு மாறான எந்தக் குறையும் இல்லையென்று பிரதேசவாசிகள் மற்றும் சுற்றுலா பணிகளில் ஈடுபடுபவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சில இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகள் பயண ஆலோசனையைத் தொடர்ந்து அப்பகுதியை விட்டு வெளியேறிய போதிலும், தற்போது விடுமுறை காலம் இருந்தபோதிலும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அறுகம்குடா சுற்றுலா வலயத்தில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற சமீபத்திய எச்சரிக்கை அப்பகுதியில் பொதுமக்களின் வாழ்க்கையை பாதிக்கவில்லை.

அப்பகுதியில் மீன்பிடித் தொழில் வழமைக்குத் திரும்பியுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டினர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் கோவிட் தொற்று நோயைத் தொடர்ந்து நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்பகுதியில் சுற்றுலா வளர்ச்சியடைந்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது இப்பகுதியில் விடுமுறை காலம் என்பதால், சுற்றுலாப் பயணிகளுக்கு நியாயமான கட்டணத்தில் ஹோட்டல் வசதிகள் இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# முட்டை விலை மாற்றம்

கொழும்பு, ஒக். 29

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் உளளூர் சந்தையில் முட்டையின் விலை குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை முட்டை வியாபாரிகள் சங்கத்தின் அறிக்கையின்படி சந்தையில் நேற்று சிவப்பு முட்டை ஒன்றின் விலை ரூ. 36 ஆகும்.

இதேவேளை, வெள்ளை முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக பதிவாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சிவப்பு மற்றும் வெள்ளை முட்டை ஒன்றின் விலை முறையே ரூ.42 மற் றும் 41 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் தொகுதியில் பிரசாரத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி!



யாழ்ப்பாணம், ஒக். 29

**யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு உட்பட்ட கோப்பாய் தொகுதியில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் வேட்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பா.கஜதீபன் ஆகியோர் தமது பிரசார பணிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்தனர்.**

இப்பிரசார பணிகளில் கட்சியின் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணியின் உறுப்பினர்கள் மிகத் தீவிரமாக பங்கெடுத்திருந்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் அமைந்துள்ள செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனத்தில் அங்கத்துவத்தினருடனான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது.

வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் வேட்பாளருமான பா.கஜதீபன் ஆகியோருக்கும் செவிப்புலன் வலுவற்றோர் சங்க அங்கத்தவர்களுக்கும் இடையிலான இந்தக் கலந்துரையாடல் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது செவிப்புலன் வலுவற்றோர் சங்கத்தினர் கடந்த காலங்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் ஆகியோர் வழங்கிய உதவிகளுக்கும், சேவைகளுக்கும் நன்றி தெரிவித்ததோடு தொடர்ச்சியாக அவர்கள் இவருக்கும் தமது ஆதரவையும் வெளிப்படுத்தினர். (அ)



## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசாரம் வடமராட்சி கிழக்கில்!

யாழ்ப்பாணம், ஒக். 29

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளரும் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவருமான சி.வேந்தனை ஆதரித்து வடமராட்சி கிழக்கு பிரதேசங்களுக்கான பரப்புரை நடவடிக்கைகளின் ஆரம்பம் மணற்காட்டில் முன்னாள் போராளிகள் மற்றும் இளைஞர்களால் நேற்று முன் தினம் காலை 07.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.

வேட்பாளர் வேந்தன் மக்களை சந்தித்து அவர்களது தேவைப்பாடுகளை கேட்டறிந்ததோடு தேர்தல் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து பாராளுமன்றத்திற்கு புதிய முகங்களின் தேவைப்பாட்டை வலியுறுத்தி ஆதரவு கோரினார்.

பரப்புரையின்போது சி.வேந்தன் தெரிவிக்கையில்-

பழையவர்களை தொடர்ந்து பாராளுமன்றம் அனுப்பி நாம் ஏமாந்த காலம் வரும் தேர்தலுடன் முடிவு பெறட்டும். எமது தமிழ் மக்களின் குரலாக பாராளுமன்றத்தில் எமது குரலும் ஓங்க முன்னாள் போராளிகளுடன் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து எமது கரத்தை பலப்படுத்த வேண்டும்-என்றார். (அ-05)



## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வவுனியாவில் தேர்தல் பிரசாரம்

வவுனியா, ஒக். 29

பாராளுமன்றத் தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் போட்டியிடும் போராளி யசோதினி வவுனியா ஈஸ்வரிபுரம் பகுதியில் தேர்தல் பிரசாரத்தினை முன்னெடுத்தார்.

இதன்போது முன்னாள் போராளிகள் மற்றும் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டு குறித்த பிரசார நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர். (அ)

# தமிழ் மக்களுக்கு வெளிப்படையான அரசியல் தலைவர்கள் வரவேண்டும்

மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

தமிழ் மக்களுக்கு வெளிப்படைத்தன்மை பொருந்திய தலைவர்களே வேண்டும் பாராளுமன்றத்தில் பூச்சாண்டி காட்டும் தலைவர்கள் தேவையில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் பாராளுமன்ற வேட்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

தந்தை செல்வா நினைவரங்கில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தெற்கில் இலஞ்சம் ஊழலுக்கு எதிராக வெளிப்படையான மாற்றம் ஒன்றின் தேவைப்பாடு உணரப்பட்ட நிலையில் ஒரு அமைப்பு மாற்றத்தை உருவாக்கியது.

அவ்வாறான ஒரு மாற்றம் தமிழ் மக்களிடையே வருவதற்கு வெளிப்படைத்தன்மை உள்ள அரசியல்வாதிகள் அல்லது அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்க வேண்டும்.

ஏனெனில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்துக்கு நாட்டின் இலஞ்சம், ஊழல் பிரதான காரணமாக சுட்டிக் காட்டப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் தலைவர்கள் வெளிப்படையாக செயற்படாது பூச்சாண்டிகளாக செயற்பட்டனர்.

ஆகவே எமது மக்களை அரசியல் ரீதியிலும் அபிவிருத்தி ரீதியிலும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு வெளிப்படைத் தன்மை பொருந்திய அரசியல் தலைமைகள் தலைமை ஏற்க வேண்டும்-என்றார். (அ-05)

# அம்பாறை தமிழர்களின் வாக்கை சூறையாட களம் இறங்கிய டக்ளஸ்

அம்பாறை, ஒக். 29

25 வருடமாக அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா அம்பாறை மாவட்டத்துக்கு எவ்வித காரியங்களும் இதுவரை செய்யாத நிலையில் இப்போது பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் களம் இறக்கி சிறிதளவு வாக்கை பெற்றுக் கொண்டு-அம்பாறை தமிழர்களின் வாக்குகளை சூறையாடி தனது சகாக்களில் ஒருவரை தேசியப் பட்டியலில் நிரப்புவதற்காக வந்துள்ளார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பிரசார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலத்தில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இழந்த போது தமிழரசு கட்சி அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்களை அநாதையாக விடக்கூடாது. அவர்களை கௌரவப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோர் பின்னடைவு கண்ட போதிலும் தங்களுக்கு கிடைத்த ஒரே ஒரு தேசியப் பட்டியல் அங்கத்துவத்தை அம்பாறை மாவட்டத்துக்கு கொடுத்து கௌரவப்படுத்தி இருந்தனர். எனவே ஒவ்வொரு தமிழ் மக்களும் இந்த கட்சிக்கு கடமைப் பட்டவர்களாக இருக்க வேண்டும்.

2024 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் ஒரு பிரதிநிதித்துவத்தை இழக்கின்ற போது அதனால் ஏற்படுகின்ற விளைவானது மிகவும் பாரதூரமாக இருக்கும். அந்த நிலையினை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் மூச்சு விட முடியாத ஒரு நிலையாகவே நான் கருதுகிறேன்.

இந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் வரவில்லை என்றால் எந்த ஒரு காலகட்டத்திலும் தமிழ் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்துக்கு



வராது என்பதை நான் உறுதியாக கூறுகிறேன்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு அம்பாறை மாவட்டத்திற்கு என்ன செய்தது என கேள்வி கேட்கும் கட்சிகள் மீண்டும் மாறி அதே கேள்வியை தம்மைத் தாமே கேட்கவேண்டும்.

முதலமைச்சராக இருந்த பிள்ளையான் அம்பாறை மாவட்டத்திற்கு என்ன செய்து இருக்கிறார்?

அம்பாறை மாவட்டத்திற்கு அபிவிருத்திக்காக ஏதேனும் ஒரு சதம் செலவழித்து இருக்கிறாரா? அதேபோன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரச்னைகளுக்கு எப்போதாவது குரல் கொடுத்திருக்கின்றாரா?

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை படகுச் சின்னம் களம் இறக்கப்பட்டிருப்பது இங்கிருக்கும் பிரதிநிதித்துவத்தை இழக்க செய்து இங்குள்ள தமிழர்களை [illegible]-என்றார். (அ)

# ஜனாதிபதி அநுரவினால் ஆட்சியமைக்க முடியாது!

வவுனியா, ஒக். 29

தனித்து நின்று ஜனாதிபதியுடைய கட்சியால் ஆட்சி செய்ய முடியாது என்ற செய்தியை எல்பிட்டிய தேர்தல் முடிவுகள் சொல்லியிருப்பதுடன் சிறுபான்மை மக்களுக்காக பேசக்கூடிய ஆளுமை உள்ள தலைவராக சஜித் பிரேமதாஸ மாத்திரமே இருப்பதாக முன்னாள் அமைச்சரும் வன்னி மாவட்ட வேட்பாளருமான ரிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் முடிவுகள் நாட்டுக்கு ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றது. அதாவது கடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார 42 வீதமான வாக்குகளை பெற்றிருந்தார். அந்தவகையில் 58 வீதமான வாக்குகள் அவருக்கு எதிராக இருந்தன.

ஜனாதிபதி தேர்தலின் பிறகு உடனடியாக ஒரு தேர்தல் நடக்குமாக இருந்தால் வாக்குகள் அதிகரிப்பதுவே வழமை. ஆனால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்ற செய்தியை எல்பிட்டிய தேர்தல் நாட்டு மக்களுக்கு சொல்லியிருக்கின்றது.

அந்த தேர்தல் முடிவுகளின் படி தனித்து நின்று ஜனாதிபதியுடைய கட்சியால் ஆட்சி செய்யமுடியாது என்ற செய்தியும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் வாக்குகள் குறைவடைந்து கொண்டே செல்கின்றன.

எனவே தமிழ் பேசுகின்ற மக்கள் ஆழமாக சிந்தித்து இந்த தேர்தலில் தங்களது பிரசதேசங்களுக்காக பணியாற்றக்கூடிய நல்லவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும். வன்னியில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசனங்கள் எமக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

சிறுபான்மைச் சமூகங்கள் தலைமைகளை இழந்துவிட்டால் நம்மை அடக்கி துன்பப்படுத்தும்போது அதற்கு எதிராக பேசுவதற்கு தலைமைகள் இல்லாத நிலையே ஏற்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவால் செய்யமுடியாததை ஐக்கிய மக்கள் சக்தி செய்யும்!

## சஜித் பிரேமதாஸ சவால்

**கொழும்பு, ஒக். 29**

**ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அவர்களால் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வரிகளை குறைக்க முடியாது போனாலும், எம்மால் முடியும் என, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

2024 பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் ஹோமாகம தேர்தல் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையில் ஹோமாகம நகரில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியான வெற்றியைப் பெறும். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தான் ஆட்சிக்கு வந்தால் வரிச்சூத்திரத்தை மாற்றுவேன், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய போதிலும், அந்த வரிகளை குறைப்பதில் உடன்பாடு காணப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. தேர்தலின்போது வரியைக் குறைப்பதாகச் சொன்னாலும், ஆட்சிக்கு வந்த பிறகு அதனை உரியவாறு அவரால் செய்ய முடியாதுபோயுள்ளது.

இன்றும்கூட ஜனாதிபதியால் வரிகளை குறைக்க முடியவில்லை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவினால் செய்ய முடியாததை ஐக்கிய மக்கள் சக்தியால் செய்ய முடியும்.

இன்னும் 4 வருடங்களில் அதாவது 2028 இல் மீண்டும் கடனை செலுத்தவேண்டும். முந்தைய அரசு இவ்வாறு ஒப்பந்தம் செய்து கொண்டது. 2033 ஆம் ஆண்டு கடனை செலுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் கூறினாலும், 2028 ஆம் ஆண்டிலிருந்து கடனை செலுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தானாகவே இணக்கம் தெரிவித்துள்ளது.



எனவே, 2028 ஆம் ஆண்டு முதல் கடன் செலுத்தும் நடைமுறையை மேற்கொள்ளக்கூடிய நாடாக நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் இன்னும் வேகமெடுக்கவில்லை.

இதுவரை உருவாக்கப்பட்ட தேசியப் பொருளாதாரப் பிரச்னைக்கு மத்தியில் சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்டுள்ள தாக்கமானது கற்பனை செய்து பார்க்க முடியாத விடயமாக அமைந்து காணப்படுகிறது. முதலீடு, நுகர்வு, சேமிப்பு, உற்பத்தி, மற்றும் ஏற்றுமதி ஆகியவை ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான அம்சங்களாக காணப்படுகின்றன. ஒரு நாடு என்ற வகையில் இந்த துறைகளில் ஒரு படி முன்னேறுவதற்கு நாம் தயாராக வேண்டும். இந்த தொலைநோக்கை முன்னெடுக்கக்கூடிய சிறந்த அணியை ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டுள்ளது-என்றார். (அ)

# கண்டி தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்வது அவசியம்

## பழனி திகாம்பரம் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 29

கண்டி மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக் கொள்ளவும் எமது உரிமை சார் அரசியலை மேற்கொள்ளவும் பக்க பலமாக எமது ஒத்துழைப்பு பாரத் அருள்சாமிக்கு வழங்கப்பட வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தின் தொழிற்சங்க தலைவர்களை கினிகத்தேனையில் சந்தித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட அமைப்பாளர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களைப் போன்று சிறுபான்மை மக்களுடைய பிரதிநிதித்துவத்தை கண்டி மாவட்டத்தில் தக்க வைத்துக் கொள்ள முஸ்லிம் மக்களுடைய பூர்ண ஒத்துழைப்பையும் தான், வேட்பாளர் பாரத்துக்கு வழங்க உள்ளதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



இதன்போது கருத்து தெரிவித்த பாரத் அருள்சாமி, இரு பெரும் தலைமைகளின் ஆசிகளுடன் நிச்சயம் கண்டி மாவட்டத்தில் தமிழ் மக்களுடைய பிரதிநிதியாகும் மக்கள் ஆணையை தான் பெறுவேன் என நம்பிக்கை வெளியிட்டார்.

கண்டி மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் இம்முறை பாதுகாக்கப்படும். இது விடயத்தில் மக்கள் உறுதியாகவுள்ளனர்.

எனக்கான அமோக ஆதரவை மக்கள் வழங்குவார்கள். எதிர்க்கட்சியில் இருந்தபோது தேசிய மக்கள் சக்தி சொன்னது ஒன்று, இன்று செய்வது வேறொன்று.

இதனால் மக்கள் மத்தியில் திசைக்காட்டிக்கான ஆதரவு குறைந்து, ஐக்கிய மக்கள் கூட்டணிக்கான ஆதரவு அதிகரித்துள்ளது-என்றார். (அ)

# அரசு வீழ்ச்சியடைய ஆரம்பித்துவிட்டது!

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 29

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் வீழ்ச்சியடைய ஆரம்பித்துள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைமையகத்தில் நடந்த சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி என்று பெயர் மாற்றிக்கொண்டாலும் மக்கள் விடுதலை முன்னணியினராகவே அந்தக் கட்சி இயங்குகிறது.

அதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி அவசியமில்லை என்ற தோரணையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். அவ்வாறாயின் அது ஜனநாயக விரோதமாகும். ஜனநாயக ரீதியில் நாட்டை கொண்டு செல்வதற்கு ஆரோக்கியமான எதிர்க் கட்சி அவசியமாகும். அவ்வா றாயின் அதற்கு ஐக்கிய மக்கள் சக்தியே பொருத்தமானதாகும். எமது கட்சியிலும் பூரண ஜனநாயகம் இருக்கிறது. நாம் ஒரு போதும் ஆயுதம் தாங்கி ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கவில்லை.

அனைத்துப் பகுதி மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவராக சஜித் பிரேமதாஸ காணப்படுகிறார். ஆகையால் நாட்டை வழிநடத்தக் கூடிய ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு-என்றார். (அ)

# தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யும் சூழ்ச்சியில் எங்கள் மக்கள் சிக்கக்கூடாது!

## கூறுகின்றார் ஜீவன் தொண்டமான்

யாழ்ப்பாணம், ஒக். 29

"தமிழ்ப்பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யும் சூழ்ச்சியில் மக்கள் சிக்கக்கூடாது. எமது பிரதிநிதித்துவத்தை மக்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்" - என்று இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை சீ.எல்.எப் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆட்சியில் குறுகிய காலப்பகுதிக்குள் மலையக மக்கள் தொடர்பில் அரசியல், பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த திட்டங்களை நாம் முன்னெடுத்திருந்தோம். வீடமைப்பு திட்டம்கூட மீள ஆரம்பிக்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதித் தேர்தலுக்கு பிறகு மலையக மக்கள் தொடர்பில் இன்னும் எவ்வித திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை. அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் உள்ளது.

பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என ஜனாதிபதி தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியினர் உறுதியளித்திருந்தனர். ஆனால் பொருட்களின் விலை தற்போது அதிகரித்துள்ளன. நாம் ஜனாதிபதியை விமர்சிக்கவில்லை. இன்னும் பொருளாதார நெருக்கடி உள்ளது. மக்களும் சற்று பொறுமை காக்க வேண்டும். ஆட்சி மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளை சந்திக்க வேண்டும்.

எரிபொருள் விலைகூட கணிசமான அளவு குறையும் என கூறியிருந்தனர். ஆனால் ஓரளவுதான் குறைந்துள்ளது. எமது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட எரிபொருள் விலை சூத்திரத்துக்கமையவே செயற்பட வேண்டியுள்ளது.

கண்டி, உன்னஸ்கிரிய பகுதியில் அரச பெருந்தோட்டயாக்கத்தால் கடிதமொன்று அனுப்பட்டுள்ளது. 14 நாட்கள் தொடர்ச்சியாக வேலைக்கு வராவிட்டால் வெளியேற்றப்படுவீர்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, எமக்கான பிரதிநிதித்துவம் இருந்தால்தான் இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள வேண்டும். தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்யும் சூழ்ச்சியில் மக்கள் சிக்கக்கூடாது. எமது பிரதிநிதித்துவத்தை மக்கள் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.- என்றார். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் இரத்தாகும்!

## அநுரகுமார திஸநாயக்க திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 29

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகள், சலுகைகள் நிச்சயமாக இரத்து செய்யப்படும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தேகமவில் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதிகளை பராமரிப்பதும் கவனித்துக் கொள்வதும் மக்களின் வேலையில்லை. சுற்றறிக்கைகள், பாராளுமன்ற சட்டங்கள், அரசமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு விசேட சலுகைகள், சிறப்புரிமைகள் வழங்கப்படுகின்றன.



அந்த சுற்றறிக்கைகளில், சட்டங்களில் மாற்றங்களை கொண்டுவருவது குறித்து கவனம் செலுத்துகின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பேசியதால் கடை அடித்து நொறுக்கப்பட்டது!

## முறைப்பாட்டை ஏற்க பொலிஸார் மறுப்பு



கல்முனை, ஒக். 29

**அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு தாளவட்டுவான் பிரதான வீதியில் அமைந்துள்ள கடை ஒன்றில் அரசியல் பேசியதால் இனந்தெரியாத நபர்களால் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது.**

இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது. அம்பாறை - திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளரது கடையே இவ்வாறு அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு குறித்த வேட்பாளர் சென்று சேதமடைந்த கடையை பார்வையிட்டதுடன் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய சென்றபோதும் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

பொலிஸாரால் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படாமை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாக பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர் குறிப்பிட்டார்.

மேலும், குறித்த கடையில் அரசியல் விடயங்களை தாங்கள் உரையாடுவதாகவும் இதனால் ஏனைய தரப்புகளால் கடை உடைக்கப்பட்டிருக்கக் கூடும் என வேட்பாளர் பிரகாஸ் தெரிவித்தார். (எ)

# பாடசாலை மாணவர்களுக்கு புத்தக பைகள் வழங்கப்பட்டன



சாய்ந்தமருது, ஒக். 29

சாய்ந்தமருது கோட்டத்துக்கு உட்பட்ட பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு காலணிகள் மற்றும் புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச். ஈ. எம். டபிள்யூ. சீ. திஸநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம், அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ. எம். சாஹிர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ. அஸ்மா மலிக், சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய அதிபர் யூ. எல். நசார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு புத்தகப் பைகள் மற்றும் காலணிகளை வழங்கினர். (எ)

# மருதமுனை நூலகத்தில் 'கீறல்' சஞ்சிகை அறிமுகம்






மருதமுனை, ஒக். 29

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வுகளில் ஓர் அங்கமாக "கீறல்" சஞ்சிகையின் 11ஆவது இதழ் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நூலகர் ஹரீஷா சமீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கவிஞர் சட்டத்தரணி ஏ. எல். றிபாஸ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

இதன்போது கீறல் சஞ்சிகையின் ஆசிரியர் அலிஸ் எம். பாயிஸ், நிகழ்வில் பங்கேற்றிருந்த விருந்தினர்கள் மற்றும் கலை, இலக்கியவாதிகளுக்கு சஞ்சிகையின் சிறப்பு பிரதிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கவிஞரும் விமர்சகருமான ஜெஸ்மி மூஸா, வாசகர் வட்டத்தின் தலைவர் கவிஞர் விஜிலி மூஸா, எழுத்தாளர்களான ரகுமான் ஏ. ஜமீல், டீன் கபூர், கல்முனை சமீம், எஸ். ஏ. கப்பார், இசட். எம். நிலாம் நழீமி, மாஜிதா தௌபீக், நிஷா இஸ்மாயில், ஜெசிமா முஜீப், பத்ரு நிஷா, சுமையா ஜெஸ்மி, எஸ். முன்சிலா, மலீஸ் அமீன் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள், வாசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதமுனை பொது நூலகத்தில் பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

# விழிப்புலனற்றோர் பாடசாலை ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 29

"பார்வையற்றோருக்கு பாதை காட்டும் வெண்பிரம்பு" எனும் தொனிப்பொருளில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் தலைவரும் பாடசாலை ஸ்தாபகருமான இதயராஜா தலைமையில் மட்டக்களப்பு கல்லடியில் நேற்று நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் கலந்து கொண்டார்.

மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், தரிசனம் விழிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச வெள்ளை பிரம்பு விழிப்புணர்வு நடைபவனி, கல்லடி - கல்முனை பிரதான வீதி ஊடாக விழா மண்டபத்தைச் சென்றடைந்தது.

விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் பிரதான நிகழ்வுகள் நடைபெற்றன. தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலை மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன்போது நடைபெற்றன. (எ)

# "பணியிடத்தில் மனநலத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்"

## ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கு செயலமர்வு

மட்டக்களப்பு, ஒக். 29

மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று நடைபெற்றது.

"பணியிடத்தில் மனநலத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரமிது" எனும் தொனிப்பொருளில் ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கு இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

முறைசாராக் கல்விப் பிரிவு இணைப்பாளர் றீற்றா கலைச்செல்வனின் ஒழுங்குபடுத்தலில் வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் வளவாளர்களாக களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையின் உளநல மருத்துவர் ஏ. தேவறஞ்சினி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தட்சணாமூர்த்தி, வழிகாட்டல் ஆலோசனை ஆசிரிய ஆலோசகர் பா. துஷ்யந்தன், ஆரம்பக் கல்விக்கான வளவாளர் பி. சத்தியரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களிடையே காணப்படும் உளவளர்ச்சி சிக்கல்கள், உளநலம், மெல்லக்கற்றல், பரிகாரக் கற்பித்தல் செயல்பாடுகள், கற்பித்தலில் துணைச்சாதனப் பயன்பாடும், நுட்பங்களும், வகுப்பறை முகாமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பில் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. (எ)

# மட்டக்களப்பு, திருகோணமலையில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

மட்டக்களப்பு, ஒக். 29

நாட்டின் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரிக்கு எம் வலிமையை புரிய வைக்க வேண்டும்

## ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லா

தெஹ்ரான், ஒக். 29

**ஈரானின் வலிமையை எதிரிக்கு (இஸ்ரேலுக்கு) புரிய வைக்க வேண்டும் என்று ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார்.**



கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் பகுதிகளை இலக்கு வைத்து ஈரான் இராணுவம் 200 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதற்குப் பதிலடியாக ஈரான் தலைநகர் தெஹ்ரான் உட்பட அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் இஸ்ரேலின் 100 போர் விமானங்கள் கடந்த 26 ஆம் திகதி தாக்குதல் நடத்தின. அப்போது ஈரானின் ரேடார் சாதனங்கள், ஏவுகணை, ட்ரோன் உற்பத்தி தொழிற்சாலைகள், இராணுவத் தளங்கள் மீது சுமார் 3 மணி நேரம் தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் ஈரான் படையினர் நால்வர் உயிரிழந்தனர்.

அவர்களின் உறவினர்கள் ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லாவை சந்தித்தனர். அவர்கள் மத்தியில் கமேனி உரையாற்றுகையில், "கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் போர் விமானங்கள் ஈரான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தின. மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தியதாகவும் ஈரானில் பேரழிவு ஏற்பட்டிருப்பதாகவும் இஸ்ரேல் கூறி வருகிறது. இது உண்மை கிடையாது. ஈரானில் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படவில்லை. அதேநேரம் இஸ்ரேலின் தாக்குதலை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் ஈரான் குறித்து தப்புக் கணக்கு போட்டு வருகின்றனர். ஈரானின் வலிமையை எதிரிக்கு (இஸ்ரேலுக்கு) புரிய வைக்க வேண்டும். இதை செய்ய வேண்டியது ஈரான் அரசின் கடமையாகும். நாட்டை காக்க இளைஞர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

கடந்த கால ஆட்சியாளர்களின் தவறால் சில மோசமான விளைவுகளை சந்திக்க நேர்ந்தது. அந்தத் தவறுகளை திருத்தி துணிச்சலாக முன்னேறி செல்ல வேண்டும். பொருளாதாரம், பாதுகாப்பு, ஆயுத உற்பத்தியில் ஆட்சியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அமெரிக்காவும், உலக நாடுகளும் இஸ்ரேலை கண்டிக்க மறுக்கின்றன. காஸா, லெபனானில் இஸ்ரேல் இராணுவம் அப்பட்டமாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது. போர் விதிகளை மீறி செயல்பட்டு வருகிறது. அப்பாவி மக்களை கொடூரமாக கொலை செய்து வருகிறது. இஸ்ரேலுக்கு எதிராக முஸ்லிம் நாடுகள் ஓரணியில் திரள வேண்டும்"- என்றார்.

(எ)

# 50 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்

புதுடில்லி, ஒக். 29

இந்தியாவில் தொடர்ந்து 14ஆவது நாளாக 50 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

இந்திய விமான நிறுவனங்களை குறிவைத்து சமூக ஊடகங்கள் மூலமாக தொடர்ச்சியாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு வருகிறது. இதில் 14ஆவது நாளாக நேற்று முன்தினம் சுமார் 50 விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டன.

ஆகாசா ஏர் நிறுவனத்தின் 15 விமானங்களுக்கும், இண்டிகோவின் 18, விஸ்தாராவின் 17 விமானங்களுக்கும் வெடிகுண்டு மிரட்டல் வந்ததாக அந்த நிறுவனங்கள் தெரிவித்தன. இதில் இண்டிகோவின் 2 விமானங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக அகமதாபாத், மும்பைக்கு திருப்பி விடப்பட்டன.

நேற்று முன்தினம் வரை 14 நாளில் 350இற்கும் மேற்பட்ட விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

(எ)

# காஸாவில் இரண்டு நாட்கள் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு

கெய்ரோ, ஒக். 29

காஸாவில் இரண்டு நாட்கள் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எகிப்து ஜனாதிபதி அப்துல் பதா அல் சிஸி அழைப்பு விடுத்துள்ளார்.

தலைநகர் கெய்ரோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"காஸாவில் இரண்டு நாட்கள் போர் நிறுத்தத்தை மேற்கொள்ள முன்மொழிகிறேன். இந்த இரண்டு நாட்களில் இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பலஸ்தீன கைதிகளுக்குப் பதிலாக காஸாவில் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிக்கலாம். அதைத் தொடர்ந்து அடுத்த 10 நாட்களுக்கு மேலும் சமரசப் பேச்சுகளை முன்னெடுக்கலாம்"- என்றார். (எ)

# தனிமை மரணங்களைத் தடுக்க ரூ. 2,750 கோடியில் சிறப்பு திட்டம்

சியோல், ஒக். 29

தென்கொரியாவில் தனிமை மரணங்கள் அதிகரித்து வருகின்றன. இதைத் தடுக்க அந்த நாட்டு அரசு 2,750 கோடி ரூபாயில் சிறப்பு திட்டத்தை அறிவித்துள்ளது.

தென்கொரியாவில் 5. 17 கோடி மக்கள் வசிக்கின்றனர். உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாக அந்த நாடு முன்னேறியுள்ளது. உலக சந்தையில் தென்கொரிய மின்னணு சாதனங்கள், வாகனங்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. ஆனால், தென்கொரிய மக்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லை என்று பல்வேறு ஆய்வறிக்கைகள் சுட்டிக் காட்டியுள்ளன. குறிப்பாக தென்கொரிய அரசு சார்பில் அண்மையில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது.

அதில் தனிமையில் வாழ்வோரில் 5 பேரில் 4 பேருக்கு தற்கொலை சிந்தனை இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் தென்கொரியாவில் தனிமையில் வாழும் நடுத்தர வயது மக்கள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஒரு நாளில் சராசரியாக 9 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். மேலும் தனிமையில் வாழும் முதியோர் தனித்து உயிரிழக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

40 வயது முதல் 55 வயதுக்கு உட்பட்டோர் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதை தடுக்க ரூ. 2,750 கோடியில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக தனிமையில் வாழ்வோருக்கு ஆலோசனைகளை வழங்க 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்படி நாட்டின் அனைத்து மாகாணங்களில் சிறப்பு ஆலோசனை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தனிமையில் வாழும் இளைஞர்கள், நடுத்தர வயதினருக்கு மாதந்தோறும் 41,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது.

(எ)

# விக்கிபீடியாவுக்கு எதிராக எலான் மஸ்க் போர்க்கொடி

வாஷிங்டன், ஒக். 29

"இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையே நடந்து வரும் மோதலில் பிரச்னையை உருவாக்க விக்கிபீடியா முயற்சிக்கிறது"- இவ்வாறு உலகின் முதல் நிலை பணக்காரரான எலான் மஸ்க் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் விக்கிபீடியா தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. தீவிர இடதுசாரி ஆர்வலர்களால் கட்டுப்படுத்தக்கூடிய தளமாக விக்கிபீடியா உள்ளது. தற்போது இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையே நடந்து வரும் மோதலில் பிரச்னையை உருவாக்க விக்கிபீடியாவைச் சேர்ந்த 40 ஆசிரியர்கள் கொண்ட குழுவினர் மூலம் இஸ்ரேல்தான் தவறு செய்கிறது என நம்ப வைக்க முயற்சி நடக்கிறது. எனவே, பொதுமக்கள் விக்கிபீடியாவுக்கு நன்கொடை வழங்குவதை நிறுத்த வேண்டும்"- என்று குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# பிரிவினைவாதம், ஊழலை முற்றாக ஒழிக்க வேண்டும்

## கூட்டணியினருக்கு ஆட்சியில் பங்கு முதல் மாநாட்டில் விஜய் அறிவிப்பு




விழுப்புரம், ஒக். 29

பிரிவினைவாதம், ஊழல் கலாசாரத்தை முற்றாக ஒழிக்க வேண்டும். 2026 சட்டப்பேரவை தேர்தலில் தனிப் பெரும்பான்மையோடு வெற்றி பெறுவோம். எமது கொள்கைகளை ஏற்றுக்கொண்டு வருபவர்களுக்கு ஆட்சி, அதிகாரத்தில் பங்களித்து அதிகாரப் பகிர்வு செய்யப்படும் என்று தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாட்டில் கட்சித் தலைவர் நடிகர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு - விழுப்புரத்தில் "வெற்றிக் கொள்கை திருவிழா" என்ற பெயரில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் முதல் மாநில மாநாடு நேற்று முன்தினம் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இதில் கட்சி கொள்கைகளை விளக்கி விஜய் உரையாற்றுகையில்,

"நம் கொள்கைகளின் அடையாளமாக மாறியவர் பெரியார். ஆனால், அவர் சொன்ன கடவுள் மறுப்பு கொள்கையை நாங்கள் கையில் எடுக்கப் போவதில்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதே நம் கொள்கை. அடுத்து, நேர்மையான நிர்வாகம் தந்த காமராஜர், அரசியல் சாசனம் உருவாக்கிய அம்பேத்கர், வீரமிக்க பெண்களான வேலு நாச்சியார், அஞ்சலை அம்மாள். இவர்கள் எல்லாம்தான் நம் கொள்கை தலைவர்கள். பிரிவினைவாத சித்தாந்தம் மட்டுமின்றி, ஊழல் மலிந்த கலாசாரத்தையும் ஒழிக்க வேண்டும். கருத்தியல் பேசி கொள்கை நாடகம் போடும் கபடதாரிகள்தான் இப்போது ஆண்டுகொண்டு இருக்கிறார்கள்.

மக்கள் விரோத ஆட்சியை 'திராவிட மொடல் ஆட்சி' என்று கூறி ஏமாற்றுகின்றனர். எங்கள் கட்சி வண்ணம் தவிர வேறு வண்ணத்தை எங்கள் மீது பூச முடியாது. மதச்சார்பற்ற சமூக நீதிக் கொள்கையை முன்னிறுத்தி செயல்பட உள்ளோம். எங்கள் அரசியல் பயணத்தில் முக்கிய பங்கு வகிக்கப்போவது பெண்கள். எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதே என் அரசியல் குறிக்கோள்.

இனி என்னை 'கூத்தாடி கூத்தாடி' என்று கூப்பாடு போடுவார்கள். எம். ஜி. ஆர்., என். டி. ஆரை அப்படி கூப்பிட்டவர்கள் தான் அவர்கள். ஆனால், இன்றைக்கும் அந்த தலைவர்கள் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். என் சினிமா உச்சத்தை உதறிவிட்டு வந்துள்ளேன். பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு, கல்வி, மருத்துவம், பாதுகாப்பான குடிநீர் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது தான் நம் செயல்திட்டங்களில் முக்கியமானது. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். மக்களோடு மக்களாக நாம் களத்தில் இருக்கப் போகிறோம். 2026 சட்டப்பேரவை தேர்தலில் நம்மை தனிப்பெரும்பான்மையோடு மக்கள் வெற்றி பெற வைப்பார்கள். மக்கள் ஒற்றை விரலில் அழுத்தும் வாக்குகள் நம் எதிரிகள் மீது ஜனநாயக ரீதியாக அணுகுண்டாக விழும். நம் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு வருபவர்களுக்கு ஆட்சி, அதிகாரத்தில் பங்களித்து அதிகாரப் பகிர்வு செய்யப்படும். நல்லதே நடக்கும், வெற்றி நிச்சயம்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரோக்கியோ ஓபன் ரென்னிஸ் குயின்வென் ஜெங் சம்பியன்

ரோக்கியோ, ஒக். 29

ரோக்கியோ (ஜப்பான்) ஓபன் ரென்னிஸ் தொடரில் சீன வீராங்கனை குயின்வென் ஜெங் சம்பியனானார்.

இந்தத் தொடர் ஜப்பானில் நடைபெற்று வந்தது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் சீனாவைச் சேர்ந்த குயின்வென் ஜெங், அமெரிக்காவின் சோபியா கெனினுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய குயின்வென் ஜெங் 7 - 6 (7 - 5), 6 - 3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார். (எ)

# 9 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அபார வெற்றி

## டெஸ்ட் தொடரை கைப்பற்றியது

ராவல்பிண்டி, ஒக். 29

இங்கிலாந்து அணிக்கு எதிரான கடைசி மற்றும் 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி தொடரை 2 - 1 எனக் கைப்பற்றியது.

ராவல்பிண்டியில் நடைபெற்று வந்த 3ஆவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 267 ஓட்டங்களும், பாகிஸ்தான் அணி 344 ஓட்டங்களும் எடுத்தன. 77 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய இங்கிலாந்து அணி நோமன் அலி, சஜித் கான் ஆகியோரது சுழற்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 37. 2 ஓவர்களில் 112 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பாகிஸ்தான் அணி தரப்பில் நோமன் அலி 6, சஜித் கான் 4 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதையடுத்து 36 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 3. 1 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 37 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

9 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 2 - 1 என கைப்பற்றியது.

பாகிஸ்தான் அணி சொந்த மண்ணில் 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போதுதான் டெஸ்ட் தொடரை வென்றுள்ளது. ஷான் மசூத் தலைமையிலான பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவிடம் 3 - 0 என்ற கணக்கிலும், பங்களாதேஷிடம் 2 - 0 என்ற கணக்கிலும் டெஸ்ட் தொடரை இழந்திருந்தது. தற்போது தொடர் தோல்விகளுக்கு பாகிஸ்தான் அணி முற்றுப்புள்ளி வைத்துள்ளது.




# நியூசிலாந்துக்கு சச்சின் வாழ்த்து

மும்பை, ஒக். 29

இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ள நியூசிலாந்து அணிக்கு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், ஜாம்பவானுமான சச்சின் டெண்டுல்கர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் தனது எக்ஸ் பக்கத்தில் அவர் கூறியுள்ளதாவது,

“இந்தியாவுக்கு வருகை தரும் எந்தவொரு அணிக்கும், இங்கு டெஸ்ட் தொடரை வெல்வது என்பது ஒரு கனவாகும். அதை தற்போது நியூசிலாந்து அணி செய்துள்ளது. இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

ஓர் அணியாக குழு முயற்சிகளால் மட்டுமே இத்தகைய முடிவுகளை அடைய முடியும். மேலும் இப்போட்டியில் 13 விக்கெட்களை வீழ்த்திய மிட்செல் சாண்ட்னருக்கு எனது பாராட்டுகள். இந்த அபார சாதனைக்காக நியூசிலாந்து அணிக்கு என்னுடைய வாழ்த்துகள்”-இவ்வாறு சச்சின் பதிவிட்டுள்ளார். (எ)



# புஜாரா இல்லாததால் இந்திய அணி தோல்வி

## ஆகாஷ் சோப்ரா விமர்சனம்



புதுடில்லி, ஒக்.29

சேதேஷ்வர் புஜாரா போன்ற வீரர்கள் அணியில் இல்லாததால் தோல்வியடைந்து வருகிறோம் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா தெரிவித்தார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் நியூசிலாந்து அணி 2 - 0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இந்த நிலையில் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் வரும் நவம்பர் முதலாம் திகதி தொடங்கவுள்ளது.

தொடர்ந்து 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணி தோல்வி கண்டது குறித்து ஆகாஷ் சோப்ரா தெரிவித்தவை வருமாறு, தற்போது விளையாடி வரும் இந்திய அணியில் உள்ள வீரர்களால் களத்தில் நீண்ட நேரம் நிலைத்து நின்று விளையாட முடியவில்லை.

சவாலான நேரங்களில் பொறுமையுடன் தற்காப்பு ஆட்டம் ஆடி விக்கெட்டை காப்பாற்றும் வீரர்கள் அணியில் இல்லாதது பெருங்குறை. சேதேஷ்வர் புஜாரா, ரஹானே போன்ற வீரர்கள் களத்தில் நீண்ட நேரம் நிலைத்து நின்று விளையாடக் கூடியவர்கள். புஜாரா போன்ற வீரர்கள் அணியில் இல்லாதது பெரும் குறையாக உள்ளது. புஜாரா போன்ற வீரர்கள் இல்லாததால் தான் இந்த தொடரில் நாம் தோல்வி கண்டுள்ளோம்”- என்றார். (எ)

# ஆஸியுடன் ரி - 20 போட்டிகள் பாகிஸ்தான் அணி அறிவிப்பு



லாகூர், ஒக். 29

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடனான சர்வதேச ரி - 20 போட்டி தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி, அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நவம்பர் 4ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை 3 ரி- 20, 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்த சுற்றுப்பயணத்துக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அணி விவரம் வருமாறு, அமிர் ஜமால், அப்துல்லா ஷபீக், அராபத் மின்ஹாஸ், பாபர் அஸாம், பைசல் அகரம், ஹாரிஸ் ரவூப், ஹசிபுல்லா, கம்ரான் குலாம், முகமது ஹஸ்னைன், முகமது ரிஸ்வான் (அணித் தலைவர்), முகமது இர்பான் கான், நசீம் ஷா, சயீம் அயூப், சல்மான் அலி ஆகா, ஷகீன் ஷா அப்ரிடி. (எ)

# பாக். தலைமை பயிற்சியாளர் கேரி கிரிஸ்டன் பதவி விலகல்?

கராச்சி, ஒக். 29

பாகிஸ்தான் ஒருநாள் அணி மற்றும் ரி - 20 கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளர் கேரி கிரிஸ்டன் பதவி விலகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் அணி சொந்த மண்ணில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்றது. இதையடுத்து அந்த அணி அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி -20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடருக்கான பாகிஸ்தான் அணிக்கு முகமது ரிஸ்வான் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், பாகிஸ்தான் ஒருநாள் அணி மற்றும் ரி - 20 அணியின் பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன் பதவி விலகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அவர் கடந்த ஜூன் மாதம் முதல் பாகிஸ்தான் ஒருநாள் அணி மற்றும் ரி - 20 அணியின் பயிற்சியாளராக செயல்பட்டு வருகிறார். பாகிஸ்தான் அணியிலும், பாகிஸ்தான் கிரிக்கெட் உட்கட்டமைப்பிலும் மாற்றங்களை செய்ய விரும்பினார்.

ஆனால், கேரி கிரிஸ்டன் எடுத்த முடிவுகள் பலவற்றுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பு ஒத்துழைக்கவில்லை என கூறப்படுகிறது. இதன் காரணமாக அவர் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகவுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் சில தினங்களில் வெளியாகும் என்று கூறப்படுகிறது. (எ)



# உலக ரேபிள் ரென்னிஸ்: மணிகா பத்ரா தோல்வி

புதுடில்லி, ஒக். 29

உலக ரேபிள் ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் மகளிர் ஒற்றையர் காலிறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனை மணிகா பத்ரா தோல்வியடைந்தார்.

பிரான்ஸ் - மான்ட்பெல்லியர் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் உலகத் தரவரிசையில் 30ஆவது இடத்தில் உள்ள இந்தியாவின் மணிகா பத்ரா, சீனாவின் கியன் டியான்யியுடன் மோதினார். கியன்டியான்யி 11 - 8, 11 - 8, 12 - 10 என்ற செட் கணக்கில் மணிகா பத்ராவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

இந்தத் தொடரில் இந்தியாவின் சார்பில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீராங்கனை ஜா அகுலா, முதல் சுற்றிலேயே தோல்வி கண்டு வெளியேறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபிரிக்க...

தெரிவித்தார்.

பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் இறப்பு விகிதம் மிக அதிகமாக இருக்கின்றன என்றும் இந்த நோயைக் கட்டுப்படுத்த மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேல் மாகாணத்தில் 4 பண்ணைகளில் மேற்படி ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் பதிவாகியுள்ளது. அத்துடன் இது, வடக்கு, ஊவா, வடமேல் மாகாணங்களிலும் பதிவாகியுள்ளது.

கடந்த வார தரவுகளின்படி, மேல் மாகாணத்தில் சுமார் 70 ஆயிரம் பன்றிகள் உள்ளன. இவற்றில் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை இந்த நோயால் இறந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பனை...

பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர் முன்னிலையில் நேற்றைய தினம் சகாதேவன் கொழும்பில் பதவியேற்றுக் கொண்டார்.

சகாதேவன் பனை, தென்னை சார்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இராணுவத்தை...

தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பிலான மற்றுமொரு அறிக்கையை வெளிப்படுத்தி அவர் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரித்தானியாவில் இயங்கும் சனல்4 தொலைக்காட்சியில் இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆவணப்படம் ஒன்று வெளியிடப்பட்டது. சிறிலங்கா ஈஸ்டர் பொம்பிங்ஸ் என்ற தலைப்பில் அது ஒளிபரப்பானது.

பௌத்த தலைவர் ஒருவரை ஜனாதிபதியாக்குவதற்காக இஸ்லாம் இளைஞர்கள் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாக அதில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அந்த தொலைக்காட்சியில் இலங்கை தொடர்பில் ஒளிபரப்பான அனைத்து நிகழ்ச்சிகளும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவே அமைந்திருந்தன.

இந்நிலையில் இது பற்றி விசாரணை செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் தலைமையில் முன்னாள் விமானப்படை தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி, ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஜே.சோசா ஆகியோர் இதில் அங்கம் வகித்தனர்.

இந்த விசாரணைக் குழுவின் அறிக்கையை இன்று நான் வெளிப்படுத்துகிறேன்.

அந்த அறிக்கையின் பிரகாரம் சனல் 4 தொலைக்காட்சிக்கு தகவல் வழங்கிய ஆசாத் மௌலானாவுக்கும் பயங்கரவாதியான சஹ்ரானுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசாத் மௌலானா எமது இராணுவத்தினருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் சனல்4 தொலைக்காட்சிக்கு பொய்யான தகவல்களை கூறியுள்ளார்.

அதேபோல அந்த நிகழ்ச்சியில் முகத்தை மறைத்துக்கொண்டு தான் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி எனக் கூறி தகவல் வழங்கிய நபர் புலனாய்வுப் பிரிவின் பிரதான உத்தியோகத்தராவார். தேசத் துரோகியான அவருக்கு தற்போதைய அரசாங்கத்தில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதனாலேயே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க விசாரணை அறிக்கையை வெளியிட காலம் தாமதித்து வருகிறார்.

சனல்4 தொலைக்காட்சிக்கு சென்று இராணுவத்தை காட்டிக்கொடுத்த புலனாய்வு அதிகாரி யார் என்பதை கண்டுபிடிக்க விசாரணைக் குழுவொன்றை அமைக்குமாறு நான் ஜனாதிபதியிடம் கோருகிறேன்-என்றார். (அ)

## இலங்கைக்கு...

நேற்று கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், அறுகம் குடாவில் பாதுகாப்பு அச்சுறுத்தல் எச்சரிக்கை காணப்படுவதாகத் தகவல் கிடைத்த சந்தர்ப்பத்தில், அதனை இலங்கை அதிகாரிகளுடன் பகிர்ந்தோம். அதற்கு அவர்கள் விரைவாக பதிலளித்தனர்.

தொடர்ச்சியாக அன்றாடம் இந்த விடயம் தொடர்பில் இலங்கை தலைமைத்துவத்துடனும் பாதுகாப்பு அதிகாரி களுடனும் நாங்கள் கலந்துரையாடினோம்.

எவ்வாறெனினும், இலங்கைக்கான பயண ஆலோசனை தொடர்பான சில பிழையான தகவல்கள் வெளியாகும் நிலையில் அதனை தெளிவுபடுத்தவேண்டிய தேவை எமக்கு உள்ளது - என்றார். (அ- ஐ)

## ஜே.வி.பி...

பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சில நாட்களுக்கு முன்னர், "இந்த நாட்டில் அதிகார பகிர்வுக்கு இடமில்லை", என்று பகிரங்கமாகக் கூறினார்கள்.

ஜே. வி. பியை பொறுத்தவரையில் அதன் பொதுச்செயலாளர் தேர்தல் களத்தில் போட்டியிடமாட்டார். அவர் அமைச்சு பதவியை பெறமாட்டார். ஆனால், அந்தக் கட்சியின் குரலாக - அந்த கட்சியின் கொள்கை விளக்கங்களை -அந்த கட்சி எப்படியான முடிவுகளை எடுக்கும் எனபதை சொல்பவர் அவரே.

இந்த நிலையிலேயே ரில்வின் சில்வா, "13ஆவது திருத்தச் சட்டம் குறித்து நாங்கள் பரிசீலிக்கின்றோம். அது இந்த நாட்டுக்கு தேவையற்ற ஒன்று எனக் கூறினார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை நாங்கள் ஒருபோதும் தீர்வாக ஏற்றுக் கொண்டது கிடையாது என்று தெளிவாகச் சொல்கின்றோம். அனைவரையும்விட 13 பற்றி சொல்வதற்கு எனக்கு அதிகம் உரிமையுள்ளது. ஏனென்றால், நான் அந்த மாகாண சபைக்குள் உறுப்பினராக இருந்தவன்.

இத்தனை ஆண்டுகளாக நடைபெற்ற போருக்குப் பிறகு இலங்கை அரசமைப்பிலே இருக்கக்கூடிய ஒரே ஒரு விடயம் அது எனற காரணத்தாலும் - எமது மக்களுக்கான சில நலன்களை அது சார்ந்தும் நகர்த்த முடியும் என்பதாலும் - இருக்கக்கூடிய ஒன்றை நடைமுறைப்படுத்துங்கள் என்றும் கேட்கிறோம்.

ஆனால், அது தேவையில்லை - நடைமுறைச் சாத்தியம் இல்லை என்று ரில்வின் சில்வா கூறுகிறார். ஆனபடியால் மகிந்த ராஜபக்ஷவைவிட சிங்கள - பௌத்தத்தை மிக ஆழமாக நேசிக்கின்றார் - என்றும் கூறினார். (ஐ-05)

## கல்வி...

வேண்டும் என்று கோரியும் கோப்பாயில் நேற்று போராட்டம் இடம்பெற்றது.

கோப்பாய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்களே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

பாடசாலைக்கு முன்பாக நடந்த இந்தப் போராட்டத்தின்போது பிரதான வீதியை வழிமறித்தும் பெற்றோர்கள் சிலர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து போராட்ட இடத்துக்கு வருகை தந்த வலய கல்வி பணிமனை அதிகாரி பெற்றோருடன் உரையாடினார். இதன் பின்னர், நாளை (இன்று) ஜனாதிபதி, ஆளுநர், கல்வித் திணைக்களத்துக்கு மனு அளிப்பதாகக்கூறி பெற்றோர் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தனர்.

இதேநேரம், நேற்றைய தினம் பாடசாலைக்கு மாணவர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொடுக்குளாய் - இயக்கச்சி பாதை திருத்தப் பணிக்காக மூடப்படுகிறது

வடமராட்சி, ஒக். 29

கொடுக்குளாய் - இயக்கச்சி அபாய வெளிப் பாதை இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் திருத்தப் பணிகளுக்காக மூடப்படுகிறது. இதனால், இந்த வீதியை பயன்படுத்துபவர்கள் மாற்றுவழியை பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் உறவுகள் மற்றும் அரசியல்வாதிகள், அயல் கிராம மக்களின் உதவியுடன் 78 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட கொடுக்குளாய்- இயக்கச்சி அபாயவெளி பாதை தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது.

இதனால், கையிருப்பிலுள்ள நிதியைக் கொண்டு பள்ளங்களை கிரவல் மூலம் மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் கணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், அபாயவெளி பாதை சில நாட்களுக்கு முன்பு திருத்தம் செய்யும் பணி நடைபெற்றது. கடும் மழையால் திருத்தப் பணி நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் இந்தப் பாதையை இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன்கிழமையும் மூடப்படும் என்று தெரிவித்தார்.

இந்தப் பாதையை தினமும் நூற்றுக் கணக்கானவர்கள் பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02- 05)

# 2025 கல்வி ஆண்டில் 181 நாட்களே பாடசாலை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 29

2025ஆம் ஆண்டில் உரிய நாட்களின் எண்ணிக்கை அடிப்படையில் பாடசாலைகளை நடத்துவதற்கான இயலுமை காணப்படவில்லை. 181 நாட்களே பாடசாலை நாட்களாக இருக்கும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டில் காணப்படும் அரச விடுமுறைகள் மற்றும் பாடசாலை ஆண்டு விடுமுறையின் பின்னர் ஜனவரி 27ஆம் திகதி ஆரம்பிக்கப்படுகின்றமை யால் உரிய நாட்களின் எண்ணிக்கை அடிப்படையில் பாடசாலைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாடசாலை காலஅட்டவணை தொடர்பில் 1997ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்துக்கு அமைய ஆண்டொன்றுக்கு 210 நாட்கள் பாடசாலைகள் நடத்தப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், அடுத்த ஆண்டில் அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து பாடசாலைகளிலும் 181 நாட்கள் மாத்திரமே கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இயலுமை காணப்படுவதாகக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அடுத்த ஆண்டில் முதலாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கைகளின் முதலாம் கட்டம் ஜனவரி 27ஆம் திகதி முதல் ஏப்ரல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதனிடையே, 2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையும் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள பொது விடுமுறை ஞாயிறு மற்றும் பருவ கால விடுமுறை தினங்களில் அனைத்து பாடசாலைகளும் மூடப்படும் எனவும் விசேட காரணங்களுக்காக ஏதேனும் ஒருநாளில் பாடசாலைகள் மூடப்படுமாயின் அந்த நாட்களுக்காக மாற்று தினங்களில் பாடசாலைகள் நடைபெறும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## யாழிலிருந்து...

போதும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்று புகையிரதத் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

புகையிரதப் பாதைத் திருத்தம் காரணமாக தடைப்பட்டிருந்த கொழும்பு - கோட்டை முதல் யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வரையான ரயில் சேவை நேற்று ஆரம்பமானது.

நேற்று அதிகாலை 5.45 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்ட ரயில் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்திருந்தது. இந்த நிலையில் இன்றைய தினம் காங்கேசன் துறையிலிருந்து முற்பகல் 10.30 மணிக்கு புறப்படும் ரயில் முற்பகல் 10.53 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைந்து முற்பகல் 11 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்பட வுள்ளது.

இதைத் தொடர்ந்து தினமும் யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை கடந்த ஜனவரி மாதம் முதல் அநுராதபுரம் வரையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மாகோ முதல் அநுராதபுரம் வரையிலான புகையிரத பாதை திருத்தப் பணிகளுக்காகவே இந்த ரயில் சேவை நிறுத்தப்பட்டிருந்தது. கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் ரயில் சேவை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் ரயில் சமிக்ஞை விளக்கு அமைப்பு விவகாரத்தால் ரயில் சேவையை தொடங்குவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டவிரோத பரப்புரை 100 பேர் கைது!

கொழும்பு, ஒக். 29

சட்டவிரோத தேர்தல் பிரசார செயல்பாடுகள் தொடர்பில் 100 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வார காலப்பகுதிக்குள் 39 சம்பவங்கள் தொடர்பில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காலப்பகுதிக்குள் 8 இலட்சத்துக்கும் அதிகமான சட்டவிரோத சுவரொட்டிகள் மற்றும் கட்அவுட்கள் அகற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகளை அகற்றுவதற்காக ஆயிரத்து 592 தொழிலாளர்கள் நாடளாவிய ரீதியில் கடமையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## யானை...

படுகின்றது.

இளைஞரின் உடலை மீட்ட கிராம மக்கள் ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

குறித்த காட்டு யானை கடந்த மூன்று நாட்களாக குடியிருப்புக்குள் நுழைந்து அச்சுறுத்தல் ஏற்படுத்தியது. வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்தும் உடன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மீனவர்கள் பிரச்னை குறித்து ஆராய நாளை வரும் இந்திய பிரதிநிதிகள்!

கொழும்பு, ஒக். 29

இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை தொடர்பாக கலந்துரையாடு வதற்காக இந்தியப் பிரதிநிதிகள் குழுவினர் நாளை இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 பேர் கொண்ட குழுவினர் நாட்டுக்கு வருகைதரவுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விடுவிக்குமாறு கோரி இந்திய மீனவர்கள் நேற்று முன்தினமும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். (அ)

## மன்னார் ஆயரை சந்தித்த முன்னணி



மன்னார், ஒக். 29

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோருக்கும் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகைக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஆயருடன் கலந்துரையாடி, அவரது ஆசியையும் பெற்றுக்கொண்டனர்.

தற்கால அரசியல் களநிலவரங்கள் குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது. (அ-05)

## வாகன இறக்குமதி பிற்போடப்படும்!

கொழும்பு, ஒக். 29

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதி வழங்கும் நடவடிக்கை தற்போது பிற்போடப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா காலத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கைக்கான வாகன இறக்குமதி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அந்த நேரத்தில், வாகன இறக்குமதிக்காக ஆண்டுக்கு சுமார் 1,100 டொலர்கள் செலவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாட்டரசி தட்டுப்பாடு இல்லை!

கொழும்பு, ஒக். 29

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட அரிசி மற்றும் நெல் கையிருப்பு தொடர்பான தரவுகளின் அடிப்படையில் நாட்டரசிக்குத் தட்டுப்பாடு இல்லை எனத் தெரியவந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பீ.என்.எம். விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ஏற்ற வகையில் சந்தையில் அரிசி விலையைத் தீர்மானிக்கும் சக்தியை அரசாங்கம் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு ஒருபோதும் வழங்காது எனவும் அவர் கூறினார்.

கடந்த நாட்களில் கட்டுப்பாட்டு விலைக்கும் அதிக விலையில் அரிசி சந்தையில் விற்பனை செய்யப்பட்டமையால் அதற்குத் தட்டுப்பாடு நிலவியது. இதன் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இந்த நிலையில், தற்போது சந்தையில் உள்ள அரிசி மற்றும் நெல் கையிருப்பு தொடர்பான தரவுகளை அரசாங்கம் சேகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)




## நிலவும் சீரற்ற வானிலை 8 மாவட்டங்கள் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 29

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 8 மாவட்டங்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. இதன்படி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், பதுளை, கேகாலை, புத்தளம், காலி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களே இவ்வாறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

குறித்த மாவட்டங்களில் 3,511 குடும்பங்களைச் சேர்ந்த 12,860 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சீரற்ற வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 77 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 302 பேர் தற்காலிக முகாம்களில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாக அன்ர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## ரணிலின் அரசாங்கம் பணம் ஒதுக்கவில்லை!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஒக். 29

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்காக இதற்கு முன்னர் இருந்த அரசாங்கத்தால் நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு - பாதுக்கையில் நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் உறுதியளித்த போதிலும் அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. இதேவேளை, தமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் வினைத்திறன் மிக்க அரச சேவையொன்று உருவாக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## நேற்று ஆரம்பமானது யாழ்தேவி ரயில் சேவை

கொழும்பு, ஒக். 29

கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையான ரயில் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக குறுக்கு வீதிகளை பயன்படுத்தும் மக்கள் ரயில் பாதைகளின் ஊடாக பயணிக்கும்போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் ரயில்வே திணைக்கள் வலியுறுத்தியள்ளது.

அதற்கமைய நேற்று காலை 05.45 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கி விசேட ரயில் சேவை ஒன்று புறப்பட்டது.

அந்த வகையில் காலை 5.45 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் ரயில் முற்பகல் 9.30 மணியவில் அநுராதபுரத்தை அடையும். அதனை தொடந்து அங்கிருந்து புறப்பட்டு 1.23 மணியளவில் காங்கேசன் துறையை அடையும் .

மேலும் பிற்பகல் 1.45 மணியவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் ரயில் மாலை 6.15 மணியளவில் அநுராதபுரத்தை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் ரயில் அதிகாலை 5.30 மணியளவில் அநுராதபுரத்தை அடையும். அதனை தொடர்ந்து முற்பகல் 10.18 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை அடையும்.

மேலும் காங்கேசன்துறையிலிருந்து காலை 10.30 மணிக்கு புறப்படும் ரயில் பிற்பகல் 2.30 மணியளவில் அநுராதபுரத்தை அடையும் அதேவேளை பிற்பகல் 6.30மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை அடையும். (அ)

## பொதுத் தேர்தலுக்காக 13,421 வாக்கு சாவடிகள்

கொழும்பு, ஒக். 29

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் 13ஆயிரத்து 421 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 17 இலட்சத்து 65ஆயிரத்து 351 வாக்காளர்களுக்கு இடமளிக்கும் வகையில் 1,204 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் 18 இலட்சத்து 81 ஆயிரத்து 129 வாக்காளர்களுக்கு 1,212 வாக்களிப்பு நிலையங்களும், களுத்துறை மாவட்டத்தில் 10 இலட்சத்து 24 ஆயிரத்து 240 வாக்காளர்களுக்கு 735 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்தத் தேர்தலுக்காக நாடு முழுவதும் மொத்தம் 13ஆயிரத்து 421 வாக்களிப்பு நிலையங்களும் 2,034 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் 1 கோடி 74 இலட்சத்து 30 ஆயிரத்து 354 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

## பெரும்போகத்துக்கான நீர் விநியோகம் ஆரம்பம்

மன்னார், ஒக். 29

பெரும்போக பயிர்ச் செய்கைக்கான முதல்கட்ட தண்ணீர் விநியோகம் நேற்று திங்கட்கிழமை வைபவ ரீதியாக முருகங்கன் கட்டுக்கரை குளத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை நடைபெறவுள்ளது. இந்த நிலையில், வடக்கின் இரண்டாவது பெரிய குளமான கட்டுக்கரை குளத்தின் பெரிய உடைப்பு துருசு பகுதியில் சர்வ மதத் தலைவர்களின் ஆசியுடன் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் நீர்ப்பாசன பணிப்பாளர், முருங்கன் கட்டுக்கரை குளம் நீர்ப்பாசன பொறியியலாளர், அரசாங்க திணைக்கள அதிகாரிகள் வாய்க்கால் அமைப்பு பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

கட்டுக்கரை குளத்தில் தற்போது 8.3 கன அடி தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கடவுச்சீட்டு பெறுவதற்கு மீண்டும் நீண்ட வரிசை!

கொழும்பு, ஒக். 29

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக மக்கள் மீண்டும் நீண்ட வரிசையில் நின்று கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்கின்றனர்.

வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளைப் பெற மீண்டும் வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதிகாலை முதலே நீண்ட வரிசைகள் உருவாகியுள்ளதாகவும், பலர் அதிகாலை 4 மணிக்கே குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக வந்து வரிசையில் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் கடந்த காலங்களில் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பான நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்ததுடன், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதன் மூலம் அந்த நெருக்கடி முடிவுக்கு வரும் என வெளிவிவகார அமைச்சர் அறிவித்தார்.

எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கத்தினால் இந்த நெருக்கடிக்கு உரிய தீர்வை இதுவரை வழங்க முடியவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org